# ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரதிநிதி யார்?

H.S. ஜாஹீர் ஹுஸைன், நாச்சிகுளம்

இன்றைக்கு இந்தியாவில் ஆளாளுக்கு இயக்கங்கள் அமைத்துக்கொண்டு முஸ்லிம்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை கையாளும் போது அங்கே ஒரு முழுமையான முறையில் வெற்றி பெறுவது இல்லை. அதற்கு உதாரணங்கள் பாபரீ மஸ்ஜித் பிரச்சனை; மற்றொன்று காஷ்மீர் பிரச்சினை. இவ்விரண்டு பிரச்சினைகள்தான் இந்தியாவில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கிற முக்கிய தலையாய பிரச்சினையாகும். இதற்கு ஒரு தீர்வு ஏற்படுகிற சூழ்நிலையும் இப்போதைக்கு இல்லை. இது அப்படியே ஜவ்வுமாதிரி இழுத்தடித்துக் கொண்டே போகிறது. இதனால் முஸ்லிம்களுக்குத்தான் ஆபத்துகள் தினந்தோறும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு முஸ்லிம்கள்தான் காரணகர்த்தாவாக விளங்குகிறார்கள். ஏன்? என்ன காரணம்? எப்படி? என்று மேலோட்டமாகப் பார்க்கும் போதே நமக்கு எளிதாகத் தெரிந்து விடுகிறது. அதாவது முஸ்லிம்களிடத்தில் ஒற்றுமை இல்லை. எல்லா விஷயத்திலேயும் இதுதான் ஊற்றுக்கண் அல்லது ஆணிவேராக இருக்கிறது. முஸ்லிம்களின் உலகளாவிய பலவீனமும் இதுவாகத்தான் இருக்கிறது. இதனால்தான் முஸ்லிம்களுக்கு எல்லா விதத்திலேயும் தோல்வி ஏற்படுகிறது.

மாற்றுத் தரப்பார்களும் நன்றாக விளங்கி வைத்திருக்கிறார்கள்; அதாவது முஸ்லிம்கள் சிறு சிறு குழுக்களாக இயங்குகிறார்கள். இதன் மூலம் அவர்களின் எந்த ஒரு விஷயத்தினையும் எளிதாக நசுக்கி விடலாம்; காரணம் அவர்கள் எந்த ஒரு முஸ்லிமும் முஸ்லிம் சமுதாயத்தின் ஒட்டு மொத்த பிரதிநிதி கிடையாது என்ற ஒரு அசைக்க முடியாத நம்பிக்கையை அவர்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்; உண்மை நிலவரமும் அதுவாகத்தான் இருக்கிறது நாம் அறிந்த வரையில்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிற தலையாய இரண்டு பிரச்சினைகளும் காலங்காலமாக தலைமுறை தலைமுறையாக நடந்து வருகிறது. இதனால் நிறைய முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்; பெண்களும் நிறைய தொல்லைகளுக்கு ஆளாகிருக்கிறார்கள்; சொத்து சுகங்களை இழந்திருக்கிறார்கள்; அகதிவாழ்க்கையாக வேறு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; இதனால் படிப்புகள் இழந்தும், பொருளாதாரத்தில் பெருத்த நஷ்டம் அடைந்திருக்கிறார்கள்; இது அப்படியே இன்னும் தொடர்ந்துக் கொண்டே போகிறது. இதற்கு எந்த ஒரு தீர்வும் முஸ்லிம்களிடத்தில் இல்லை என்றுதான் சொல்லலாம். சிந்தித்துப் பார்ப்பதற்கு ரொம்ப கவலையுடன் கூடிய வேதனையாக இருக்கிறது.

நாம் என்ன சொல்கிறோம் என்றால் முஸ்லிம்களுக்கு பிரச்சனைகள் மாநில அளவிலோ அல்லது தேசிய அளவிலோ நிகழும் போது அந்தந்த இயக்கங்களுக்கு உரிய பிரச்சனையாக கருதாமல், ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரச்சனையாக கருதவேண்டும். இதனால் பிரிவுகள் - பிளவுகள் தவிர்க்கப்படுகிறது. மேலும் பிரச்சனைகளும் இழுத்தடித்துக் கொண்டு போகாமல் ஒரு முடிவுக்கு வரக்கூடும்.

ஒரு பிரச்சனைக்கு சுமூகமான முறையில் தீர்வு காணும் பொழுது அப்பொழுது மற்ற இயக்கங்கள்

அதற்கு ஆட்சேபணை தெரிவித்து பிரச்சனையை மேலும் சந்தி சிரிக்கிற அளவுக்கு மீண்டும் மீண்டும் தண்ணீரை ஊற்றி பெரிய பூதகரமான நிலைக்குக் கொண்டு சென்று விடுகிறார்கள். அரசாங்க அலுவலகங்களிலும், அரசு ஊழியர்களும், மாற்று மதத்தவர்களும் முஸ்லிம்களிடம் கேட்கக் கூடிய கேள்வி என்னவென்றால், நீங்கள் எல்லாம் ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரதிநிதியா என்றுதான் முஸ்லிம்கள் தலைகுனிகிற அளவுக்குக் கேட்கிறார்கள். அப்போது அந்த இடத்தில் முஸ்லிம்கள் எந்த ஒரு பதிலும் சொல்ல முடியாமல் திருதிருவென்று பேந்தப்பேந்த முழி முழிப்பதை நாம் பரவலாகப் பார்க்கிறோம். இந்த ஒரு பலவீனத்தின் மூலம்தான் எல்லா விஷயத்திலேயும் முஸ்லிம்களுக்கு தோல்வி ஏற்படுகிறது.

நாங்கள்தான் முஸ்லிம்களிடத்தில் பெரிய அரசியல்கட்சி; நாங்கள்தான் முஸ்லிம்களிடத்தில் பெரிய இயக்க அமைப்பு; நாங்கள்தான் முஸ்லிம்களிடத்தில் பெரிய பொதுப்பணி மன்றம் என்றெல்லாம் சொல்லக்கூடியவர்கள், ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரதிநிதியா என்று கேட்கும் பொழுது, அவர்களிடத்தில் எந்த ஒரு பதிலும் கிடையாது. மேலும் அப்பொழுது மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் வாய்மூடி மௌனமாகவும் - ஊமையாகவும் இருப்பதை நாம் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம்.

**மூன்று பேர் பயணம் செய்யும் பொழுது ஒருவரை அமீராக தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.** *நபிமொழி*

இந்த ஹதீஸ் நமக்கு நல்ல ஒரு அறிவு சிந்தனையை உண்டு பண்ணுகிறது. மூன்று பேர் பயணம் செய்வதை மட்டும் குறிக்காமல் எல்லா விஷயத்திற்கும் அமீரை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் நமக்கு பாடமாக உணர்த்துகிறது. அதாவது ஒரு கூட்டுக் குடும்பத்தில் அமீராக தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதே போல் நண்பர்களிடத்தில், உறவினர்களிடத்தில், கூட்டாக தொழில் செய்பவர்களிடத்தில்; மேலும் ஒரு தெருவில், ஒரு ஊரில் அல்லது கிராம பஞ்சாயத்து அளவில், ஊராட்சி ஒன்றியம் அளவில், தாலுக்கா அளவில், நகராட்சி அளவில், மாவட்டம் அளவில், மாநிலம் அளவில் பிறகு தென்னிந்தியா, வட இந்தியா, கிழக்கு இந்தியா, மேற்கு இந்தியா பிறகு ஒட்டு மொத்த ஒன்றுபட்ட இந்தியா அளவில் இப்படிதான் நாம் முறை வைத்து அமீராக தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

குடும்பம், உறவினர்கள், நண்பர்கள், தொழில் நிலையில் உள்ள அமீர்கள் எல்லாம் நம்முடைய விருப்பப்படி தேர்ந்தெடுத்துக் கொள்கிற அமீர்கள் ஆவார்கள். அதைவிட்டு மற்ற நிலையில் பட்டியல் போட்டு காட்டியிருக்கிற அமீர்கள் எல்லாம் இஸ்லாமிய கொள்கைப் பிரகாரம் நடப்பதற்கு அல்லாஹ்வும், ரஸூலும் சொன்ன முஸ்லிம் ஜமாஅத் (கூட்டமைப்பு) அடிப்படையில் வழிநடத்தி செல்லக்கூடிய ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரதிநிதி அமீர்கள் ஆவார்கள்.

முஸ்லிம்கள் ஜமாஅத் என்ற நிலையில்தான் நாம் அமீராக தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர இயக்க அமைப்பு ஏற்படுத்திக்கொண்டு அமீராக தேர்ந்தெடுப்பது கூடாது. ஆனால் இன்றைக்கு முஸ்லிம்கள் ஜமாஅத் என்ற நிலையை விட்டு விட்டு இயக்கம் என்ற ஒரு அமைப்பை

வைத்துக்கொண்டு எண்ணிக்கையற்ற அமீரை தேர்ந்தெடுத்து வைத்திருப்பதையும் நாம் பார்க்கிறோம். இயக்கத்தின் அமீரின் முடிவுக்கும் முஸ்லிம்களின் கூட்டு செயல்பாட்டிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றுதான் நம்மால் சொல்ல முடியும். காரணம் ஒரு இயக்கத்தின் அமீர் கட்டளையிடும்பொழுது என்ன சொல்கிறார் என்றால் **முஸ்லிம்களே ஒன்றுபடுங்கள்; பிரிந்து விடாதீர்கள்; எங்கள் தலைமையின் பின்னாலும் எங்கள் அமைப்பின் கீழ் செயல்படுங்கள் வெற்றி நம் பக்கம் கிடைக்கும்** என்று அறைகூவல் விடுவதையும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். இவர்கள் இஸ்லாமிய கொள்கை வழியை விட்டு விட்டு தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு ஒட்டு மொத்த முஸ்லிம்களுக்கு அறைகூவல் விடுவது இவர்களுக்கு என்ன அறுகதை இருக்கிறது? அல்லது என்ன தகுதி இருக்கிறது?

ஆகையால் எந்த ஒரு விஷயத்திலேயும் முஸ்லிம்கள் எல்லோரும் அவரவர்களின் இயக்க அமீருக்கு கட்டுபடனும் என்பது தேவையில்லை. இயக்கம் அல்லாமல் முஸ்லிம் ஜமாஅத்தில் இணைந்து ஒரு அமீரை தேர்ந்தெடுத்து அந்த அமீர் ஒட்டு மொத்த முஸ்லிம்களுக்கு அறைகூவல் விடும் பொழுது அந்த நேரத்தில் எல்லா முஸ்லிம்களும் அமீருக்கு கட்டுப்பட வேண்டும் என்பது ஒரு இஸ்லாமிய கடமையாக ஆகிவிட்டது. அப்பொழுதான் முஸ்லிம்களுக்கு வெற்றி நிச்சயம் என்பது உறுதியாகிறது.

நாம் ஏற்கனவே மேலே பட்டியல்போட்டு காட்டியிருக்கிற முஸ்லிம்களின் நிலைக்கு அமீராக தேர்ந்தெடுப்பதுதான் ஒட்டு மொத்த முஸ்லிம்களில் பிரதிநிதியாகிறார்கள். அதை விட்டு விட்டு இஸ்லாத்தின் பிரிவினைவாத அடிப்படையில் இயக்கம் என்ற அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு அமீரை தேர்ந்தெடுத்து செயல்படுவது என்பது முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கும், அழிவுக்கும் வழி உண்டாக்கப்படுகிறது. அதனால்தான் என்னவோ இன்றைக்கு உலகத்தில் மூலைக்கு மூலை முஸ்லிம்கள் சின்னாபின்னமாக அழிவுக்கு உட்படுகிறார்கள். காரணம் இஸ்லாம் சொல்லாத தலைமைத்துத்துவத்தை தேர்ந்தெடுத்து வைத்துக்கொண்டு செயல்படும் பொழுது முஸ்லிம்கள் மாற்று மதத்தார்கள் மூலம் பாதிப்புகளுக்கும் தொல்லைகளுக்கும் பலவித இன்னல்களுக்கும் ஆளாகிறார்கள். இதனால் முஸ்லிம்கள் தினந்தோறும் கண்ணீர்வடித்து இரத்தம் சிந்துகிறார்கள். அதற்கு உதாரணம் தான் ஈராக், காஷ்மீர், போஸ்னீயா, ஆப்கானிஸ்தான் போன்ற குறிப்பிட்டுச் சொல்லுகிற முக்கியமான நாடுகளின் பிரச்சனை ஆகும். இது அல்லாமல் மேலும் பல முஸ்லிம் நாடுகளிலும், மாற்றுமதத்தார் நாடுகளில் முஸ்லிம்கள் வசிக்கிற பகுதிகளில் எல்லாம் முஸ்லிம்கள் பலவித மிரட்டல் களுக்கும், தொல்லைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகிறார்கள். எல்லாவற்றையும் நாம் உற்று நோக்கும்பொழுது முஸ்லிம் ஜமாஅத் நிலையை விட்டு விட்டு இயக்க அமைப்பு அமீருக்கு கட்டுப்படுவதால் ஏற்படுகிற வினைகள்தான் இவை எல்லாம்.

இயக்க அமீர் என்பவர்கள் எல்லாம் பணம் பதவி பட்டம் உலக சுகபோக வாழ்க்கையில் ஊறித்திளைப்பதால் அவர்கள் முஸ்லிம்களைப்பற்றி கவலைப்படாமல் இயக்கத்திற்கும் இயக்க பதவிக்கும் தான் முக்கியத்துவம் கொடுத்து தங்களை செல்வச் செழிப்பு சீமானாக அமைத்துக் கொள்கிறார்கள். இயக்க அமைப்பு அமீர்கள் சிலசமயம் அரசியல்கட்சி தலைவர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் விலை போவதையும் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். அதிலும் குறிப்பாக இந்தியாவில் தேர்தல்

நடக்கும் சமயங்களில் காங்கேயம் காளை, மயிலைக்காளைப்போல நல்ல கிராக்கியாக விலை போவார்கள். மேலும் அடிமாட்டு விலைக்கும் விலை போவார்கள். ஆக இப்படிப்பட்ட அமீர்கள் இயக்கவாதிகளின் பிரதிநிதியாக இருப்பதால் விலை போகிறார்கள். ஆனால் ஒட்டு மொத்த இஸ்லாமிய சமுதாய அமீர்களை யாரும் விலை பேசமுடியாது. காரணம் அவர்கள் மறுமைக்குப் பயந்தவர்கள். மேலும் அவர்கள் எல்லாம் இஸ்லாமிய கொள்கையை அடிப்படைத் தகுதியாக வைத்து அமீராக தேர்ந்தெடுப்பதால் அவர்கள் முஸ்லிம்களின் அடிப்படைத் தேவைகளை கவனிப்பதிலும், இபாதத் செய்வதிலும் சிறந்து விளங்குவார்கள்.

மேலும் இந்தியா அளவில் ஒரு அமீர் தேர்ந்தெடுத்து விட்டால் பிறகு உலக அளவு முஸ்லிம்களின் அமீராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவர்தான் உலக முஸ்லிம்களின் ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரதிநிதியின் தலைமைத்துவ தலைவர் ஆவார். இவரது ஆட்சி அதிகாரம் ஆளுகைக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டதுதான் ஒவ்வொரு மாகாணத்தின் கலீபாக்கள் ஆவார்கள். ஒவ்வொரு முஸ்லிம் நாடாக இருப்பதை கலைத்து விட்டு மாகாணமாக அமைக்கப்பட்டு கலீபாக்கள் நியமிப்பது என்பது அந்த மாகாணத்தின் ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரதிநிதி அமீர் ஆகிறார். அப்போதுதான் கலீபாக்களை நியமிப்பது மூலம் உலக முஸ்லிம்கள் ஒரு தலைமையின் கீழ் இஸ்லாமிய சட்டத்திட்டங்களை அமைப்பதற்கு வழி வகுக்கப்படுகிறது.

இதை விட்டு விட்டு ஒவ்வொரு முஸ்லிம் நாடாக அமைத்துக் கொண்டு இஸ்லாம் என்ற போர்வையில் பெயரளவு சட்டத்திட்டங்களை அமைப்பது அது முஸ்லிம்களுக்கு பாதகமாகவே இருக்கும். அப்படிப்பட்ட சட்டத்திட்டங்கள் இறையாட்சியை நிலைநாட்டுவதை விட்டு விட்டு ஷைத்தானிய ஆட்சிமுறையை நிலை நாட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் இப்போதைக்கு எல்லா முஸ்லிம் நாடுகளிலும் மேற்கத்திய நாட்டின் கலாச்சாரங்களை ரொம்ப சகட்டுமேனிக்கு கட்டவிழ்த்துவிடப்பட்டு பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் முஸ்லிம்கள் வழிகெட்டு மனம் போன போக்கில், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற அடிப்படையில் சொர்க்க வாழ்வை விட்டு விட்டு நரக வாழ்க்கையை தேர்ந்தெடுத்து வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். (ஒரு சில நல்லடியார்கள் மட்டும் இறைவழியில் நடக்கிறார்கள். அதையும் நாம் மறுப்பதில்லை). ஆக இதற்கெல்லாம் காரணம் உலக அளவில் முஸ்லிம்கள் ஒரு தலைமையின் கீழ் ஆட்சி அமைக்காததால் வந்த விளைவு ஆகும்.

ஆக இதன் மூலம் நாம் என்ன சொல்கிறோம் என்றால், எல்லா இயக்க அமைப்புகளையும், எல்லா முஸ்லிம் நாடுகளையும் கலைத்துவிட்டு உலக அளவில் எல்லா முஸ்லிம்களுக்கும் ஒரு நாடாக அமைத்துக்கொண்டு ஒரு தலைமைத்துவ அமீரின் கீழ் பல மாகாணஅமீர்களை நியமித்துக்கொண்டு முஸ்லிம்கள் வாழ்வதுதான் இறையாட்சி பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம்தான் எல்லா முஸ்லிம்களுக்கும் விடிவு காலம் பிறந்து விமோசனம் கிடைக்கும். இந்த ஒரு அடிப்படையில் தான் உண்மையான சாந்தி சமாதானத்துடன் வாழலாம். அதற்குண்டான வழிமுறைதான் ஒவ்வொரு முஸ்லிம் பகுதிகளுக்கு ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரதிநிதி அமீர் தேர்வு செய்யப்பட வேண்டும். எல்லா பிரதிநிதி அமீர்களும் கட்டுப்பட்டவர்கள். எல்லா மாகாணம் அமீர்களுக்கு ஆட்சி அதிகாரமுடைய உலக முஸ்லிம் ஒரே அமீருக்குக் கட்டுபட்டவர்கள். இந்த நடைமுறைதான் நபி(ஸல்) அவர்கள் காட்டிச்சென்ற

ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரதிநிதி இஸ்லாமிய வாழ்க்கையாகும். நபி(ஸல்) அவர்களுக்குப் பிற்பாடு இந்த நடைமுறை 30 ஆண்டுகள் குலாபாயே ராஷீதீன்கள் காலம்வரை தொடர்ந்து இருந்தது. அவர்களுக்கு பிற்பாடு மறைந்து விட்டது. அந்த வழிமுறைக்கு நாம் மீண்டும் புத்துயிர் கொடுத்து இறையாட்சிக்கு அடித்தளம் அமைப்பதற்கு எல்லா முஸ்லிம்களும் களத்தில் இறங்கி தீவிரமாக செயல்பட வேண்டும். அல்லாஹ் நமக்கு ஒரு நல்ல மாற்றத்தை கொடுப்பானாக; ஆமீன்!

ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரதிநிதி அமீர்களை தேர்ந்தெடுப்போம்! உலக ஒரு தலைமைத்துவ அமீரின்கீழ் நாட்டில் இறையாட்சியை அமைப்போம்!!

ஜனவரி 2005 அந்நஜாத்